முற்பகல் 11–00

5. அறிக்கைகள் அளித்தல்

மதிப்பீட்டுக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. வ. முல்லைவேந்தன், மதிப்பீட்டுக் குழுத் தலைவர்.

திரு. வ. முல்லைவேந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2007–2008 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மதிப்பீட்டுக் குழுவின் 16 முதல் 19 வரையிலான நான்கு அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

6. மானியக் கோரிக்கைகள், 2008–2009, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 27 – தொழில் துறை
(ஆ) கோரிக்கை எண் 31 – தகவல் தொழில்நுட்பவியல் துறை

(அ) கோரிக்கை எண் 27 – தொழில் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2008–2009 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைளின்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 27–தொழில் துறை. மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.305,26,45,000, மூலதனக் கணக்கில் ரூ. 10,84,37,000 மற்றும் கடன் கணக்கில் ரூ 200,00,03,000 ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள் முன் மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 27, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.